| சாட்சி : PW1<br>பாரதிராஜா | EP.11/22 in OS.263/18 | 26.06.2023 |
|---|---|---|

**PW1 – குறுக்கு விசாரணை**

இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்வதற்கு முன்பு EP.2/20 என்ற மனுவில் நீதிமன்ற பணியாளர் தாவா சொத்தின் மேற்கு புறம் இருந்த கிரில் கேட் மற்றும் தாவா சொத்தில் எங்களால் போடப்பட்ட ஆஸ்பெட்டாஸ் கூரையையும் அகற்றினார்கள் என்றால் இல்லை. நீதிமன்ற பணியாளர் மேற்படி கேட் மற்றும் கூரையை அகற்றுவதற்கு வந்தாரா என்றால் வந்தார். அன்றைய தினம் நீதிமன்ற பணியாளருக்கு ஒத்துழைப்பு கொடுக்கக்கூடாது என கிராம நிர்வாக அலுவலரிடம் வழக்கறிஞர் மூலம் நேரில் சொன்னேனா என்றால் இல்லை. நீதிமன்ற பணியாளர் சுவாதீனம் எடுக்க வந்த போது ஒரு வழக்கறிஞர் மூலம் சுவாதீனம் எடுக்கவிடாமல் 3 மணி நேரம் தகராறு நடைபெற்றது என்றால் சரிதான். அன்றைய தினம் வந்த வழக்கறிஞரின் பெயர் தெரியாது. ஆனால் அவரை சிவகாமி வழக்கறிஞர் தான் அனுப்பி வைத்தார். அன்றைய தினம் நீதிமன்ற பணியாளர் இரும்பு கேட்டையும், ஆஸ்பெட்டாஸ் கூரையும் அகற்றி விட்டு தான் சென்றார். அதன் பிறகு இந்த நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்த பிறகு மேற்படி கிரில் கேட்டை மீண்டும் போட்டேனா என்றால் இல்லை. தற்போது சென்று பார்த்தால் கிரில் கேட் இருக்குமா இருக்காதா என்றால் கிரில் கேட் தற்போது இல்லை. நான் தாக்கல் செய்த மனுவிற்கு பின்னிட்டு கிரில் கேட்டை அகற்ற சொல்லி அசல் மனுவில் மனுதாரர் குறிப்பாணை தாக்கல் செய்த பின்பும் கிரில் கேட்டை அகற்றவில்லை என்றால் அந்த குறிப்பாணைக்கு பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கிரில் கேட்டும் அங்கு இல்லை.

நான் மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். அசல் வழக்கின் மனுதாரர்கள் CCTV கேமரா வைத்துள்ளார்கள். கிரில் கேட்டை அகற்றி பின்பு மீண்டும் நாங்கள் கிரில் கேட்டை போட்டிருப்பது தற்போது வரை கேட் உள்ளதும் கேமராவில் பதிவாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அசல் மனுவின் மனுதாரர்கள் எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த முடியாது என்பதற்கு என்ன காரணம் என்றால் நாங்கள் அவ்வாறு சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு எதிராக ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்வதற்காக தாக்கல் செய்துள்ளேன். எனது சொத்தின் சர்வே எண் எனக்கு நியாபகம் இல்லை. கருப்பாயி அம்மாளுக்கு எந்த புல எண்ணில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்கு தான் தெரியும். ம.சா.ஆ.2 ஆவணத்தில் கருப்பாயி அம்மாளுக்கு 6 செண்ட் பாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ற்கு மூலப்பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள கிழமேல் 72 அடி, தென்வடல் 27 அடி அளவுகளில் தான் விற்பனையாகி உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ல் கண்டுள்ள இடம் போக மீதமுள்ள இடத்தை இந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிரச்சனைக்குரிய தென்புற சந்தை எனது தாத்தா கிரையம் பெற்றாரா என்றால் கிரையம் பெற்றார். தென்புற சந்து முழுவதும் ம.சா.ஆ.3 ஆவணத்தின்படி எங்களுக்கு தான் என்றால் சரிதான். ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணத்தின்படி தென்புற சந்தை யாரும் யாருக்கும் விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா வாங்கிய சொத்து தான். ம.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள எந்த

சொத்தை எனது தாத்தா எனது அப்பாவிற்கு எழுதி வைத்தார் என்றால் கிழமேல் 72, தென்வடல் 27 அடி கொண்ட இடத்தை தான் எழுதி வைத்தார். மேற்சொன்ன இடத்தை தவிர வேறு எந்த இடத்தையும் எனது தாத்தா எனது தகப்பனாருக்கு எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வேறு ஒரு இடம் உள்ளது. அது இந்த பத்திரத்தில் இல்லை. வேறு பத்திரத்தில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு வடக்கில் உள்ள சொத்திற்கான ஆவணங்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் அளவுகளானது 72x27 என மொத்தம் 6 செண்ட் என்று தான் உள்ளது. 72x27 என்பது 4 செண்ட் என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் 6 செண்ட் என்று போட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பழைய புல எண்.32, புதிய புல எண் தெரியாது. வழக்கு சொத்தின் சந்து தொடர்பாக தான் அசல் வழக்கின் வாதிகள் எங்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அளவு கிழமேல், தென்வடல் அளவு எனக்கு நியாபகம் இல்லை. தாவா சொத்தின் புல வரைபடத்தில் கண்டுள்ள அளவுகள் தவறானது. புல வரைபடத்தில் அளவுகள் குறைவாக உள்ளது. தாவா சொத்தின் சரியான அளவுகள் என்னவென்று காண்பிப்பதற்கு என்னிடம் ஆவணங்கள் உள்ளதா என்றால் என்னிடம் பழைய மேப் உள்ளது. அந்த மேப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா உள்ளேன். அது வீட்டில் உள்ளது. புல வரைபடத்தில் அளவு தவறாக உள்ளது என்று எனது புதிய வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியயும். புல வரைபடத்தில் உள்ள தவறான அளவுகள் குறித்து திருத்துவதற்கு வருவாய் துறையில் மனு கொடுத்துள்ளேன்.

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 10.07.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒ/ம். செ. ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.